## 12.4 1999–2000 –ம் ஆண்டிற்கான பத்தாவது நிதிக் குழு மான்ய ஒதுக்கீடுகள்

ஊரக வளர்ச்சித்துறை

அரசாணை (நிலை) எண். 199 நாள் : 25.9.1999

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடிதம் எண். 68317/99/ஊ,அ,(ம)நி–1 நாள் 15.7.99

**ஆணை**

பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஊராட்சி அமைப்புகளுக்கு மான்யம் அளிப்பதற்காக மைய அரசு மாநில அரசுக்கு 1996–97ம் ஆண்டிலிருந்து நான்காண்டுகளுக்கு இடைக்கால மான்யத் தொகை ஒதுக்கீடு செய்கிறது. 1999–2000ம் ஆண்டிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.71.83 கோடியாகும்.

2. 1996–97ம் ஆண்டும் பத்தாவது நிதிக்குழு மான்யம் ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.1 கோடி வீதமும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10 இலட்சம் வீதமும் மீதித் தொகையை 10,000–க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள ஊராட்சிகளுக்கு ரூ.7.65 இலட்சம் வீதம் என்ற அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டது. 1997–98ம் ஆண்டுக்கு, மாவட்ட ஊராட்சிக்கு ரூ.50 இலட்சம் வீதமும், ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10 இலட்சம் வீதமும், மீதித் தொகையை ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை மற்றும் மாநில நிதிக்குழு மூலம் வழங்கப்படும் தனிநபர் மான்யம் அடிப்படையிலும் பிரித்து வழங்கப்பட்டது. 1998–99ம் ஆண்டுக்கு மாவட்ட ஊராட்சிகளுக்கு 25 இலட்சம் வீதமும், ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.12 இலட்சம் வீதமும், மீதித் தொகையை ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையிலும், மாநில நிதிக்குழு மூலம் விடுவிக்கப்படும் தனிநபர் மான்யம் அடிப்படையிலும், பிரித்து வழங்கப்பட்டது.

3. ஒவ்வொரு ஆண்டும் ஒரு நிரந்தரமற்ற முறையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே நிதி ஒதுக்கீடு செய்வதால் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. மேலும் சிறிய மாவட்ட ஊராட்சிகளும் மற்றும் பெரிய மாவட்ட ஊராட்சிகளும் ஒரே அளவிலான நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதாலும், பிரச்சனைகள் எழுகின்றன. எனவே 1999–2000ம் ஆண்டுக்கான பத்தாவது நிதிக்குழு மான்யத்தினை, மாநில நிதிக்குழு மான்யத்தை மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரித்து அளிக்கும் அதே விகிதாச்சார அடிப்படையில் அதாவது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு 47 : 45 : 8 என்ற வீதத்தில் மூன்றடுக்கு அமைப்புகளுக்கு பிரித்து அதை 1991–ல் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்கலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1) பத்தாவது நிதிக்குழு மான்ய ஒதுக்கீட்டை மூலதனப் பணிகளுக்கு மட்டுமே செலவிட வேண்டும். சில்லரைச் செலவினங்களுக்கு செலவிடப்படகூடாது. உள்ளாட்சி அமைப்புகள், தங்கள் அலுவலக கட்டிடங்கள், சேமிப்பு கிடங்குகள் முதலியவற்றையும் அவசியமானால் கட்டிக் கொள்ள வேண்டும்.

2) ஒரு கிராம ஊராட்சி பத்தாவது நிதிக்குழு மான்யத்திலிருந்து ரூ.15,000/–ஐ ஒதுக்கீடு பெற்றால் இதற்கு இணையாக தொகை ரூ.15,000/–ஐ ஊராட்சிப் பொது நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்தோ ஆக மொத்தம் ரூ.30,000/– செலவில் சிறு பாலங்கள் (culverts), சாலைகள் போன்ற பணிகள் மற்றும் இதர பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும்.

3) ஒரு ஊராட்சி ஒன்றியம் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை பத்தாவது நிதிக்குழு மான்யத்திலிருந்து பெற்றால் அந்த ஊராட்சி ஒன்றியம் உதாரணமாக பள்ளிக் கட்டிட பணிகள், பிற பணிகளுக்கு ரூ.10 இலட்சத்திற்கு குறையாத தொகையை ஒன்றியப் பொது நிதி அல்லது மாநில நிதிக்குழு மான்யத்தை ஒன்று சேர்த்து (dovetailed) பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும்.

4) மாவட்ட ஊராட்சியைப் பொறுத்த அளவில் ரூ.20 இலட்சம் பத்தாவது நிதிக்குழு மான்யமாக ஒதுக்கீடு கிடைப்பதற்காக வைத்துக்கொண்டால் ரூ.20 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை மாவட்ட ஊராட்சி பொது நிதியிலிருந்தோ, மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்தோ பெற்று தார்ச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

5) ஒரு குறிப்பிட்ட பணியை பத்தாவது நிதிக்குழு மான்யம், பொதுநிதி, மாநில நிதிக்குழு மான்யம் ஆகியவற்றை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். அல்லது பத்தாவது நிதிக்குழு

மான்யத்திலிருந்து செய்யப்படும் ஒரு பணிக்கு செலவிடப்படும் தொகைக்கு ஈடான தொகைக்கு வேறு ஒரு பணியை பொது நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்தோ மூலதனப் பணியை தனியாக மேற்கொள்ள வேண்டும்.

6) மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ரூ.1 இலட்சத்திற்கு குறைவான பணிகளை செயல்படுத்தலாகாது.

4. அரசு ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) பத்தாவது மான்யக்குழுவால் 1999–2000ம் ஆண்டிற்கு பரிந்துரைக்கப்பட்ட மான்யத் தொகை ரூ.71.83 கோடியை கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகளுக்கு 47:45:8 என்ற விகிதத்தில் பரித்து வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி மொத்த மான்யத் தொகையாக ரூ.71.83 கோடியை கிராம ஊராட்சிகளுக்கு ரூ.33,76,01,000/– (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே எழுபத்து ஆறு இலட்சத்து ஒரு ஆயிரம்) ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.32,32,35,000/– (ரூபாய் முப்பத்திரண்டு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம்–மும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.5,74,64,000/– (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து அறுபத்து நான்கு ஆயிரம்)–மும் பிரித்து வழங்கி அரசு ஆணையிடுகிறது.

ஆ) மேலே பத்தி 4(அ)–வில் கண்டுள்ள நிதியினை பெற்று அதனை கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகளுக்கு மேற்குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி பிரித்து வழங்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

இ) மேற்படி நிதியினை பகிர்ந்தளிக்க 1991ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையை பின்பற்றப்பட வேண்டும். மேலும் மேலே பத்தி 3(1) முதல் 3(6) வரையிலுள்ள நிபந்தணைகளையும் பின்பற்ற வேண்டும்.

5. ரூ.71.83 கோடியை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பெற்று ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கலாம்.

“3604–உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடும் ஒதுக்கீடும்–எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் 11 மாநிலத் திட்டம்–ஜே.ஏ. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக வளர்ச்சித்துறை அரசு செயலரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு மான்யங்கள்–09–உதவி மான்யங்கள் (3604–00–200–0903)”

6. 1999–2000 ஆண்டில் பகிர்ந்தளிக்கப்படும் நிதியை மார்ச் 2000–க்குள் பயன்படுத்தப்பட்டு பயனீட்டுச் சான்று வழங்க உள்ளாட்சி அமைப்புகளை அறிவுறுத்தும்படி அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 2756/FS/P/99, நாள் 3.8.99.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்